
DIOCESE OF KUMBAKONAM

NEWS - LETTER

(Compiled and Edited by Diocesan News-Letter Committee)

VOL. : 52 OCTOBER - 2025 No. 10



தகவல் மாசிலிருந்து நம்மை தற்காப்போம்
தரமான எதிர்காலத்தை நமதாக்குவோம்!!!

ஆயரின் செய்தி

தகவல் மாசிலிருந்து நம்மை தற்காத்து தரமான எதிர்காலத்தை நமதாக்குவோம்!!!

அன்பார்ந்த சகோதரிகளே, சகோதரர்களே!

உலகில் ஒவ்வொரு காலக்கட்டமும் ஒவ்வொரு தொழில்நுட்பத்தை மையப்படுத்தி நகர்ந்து கொண்டிருக்கிறது. உலகின் முதல் தொழில் புரட்சி என்பது 18 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது. நீராவி என்ஜின் கண்டுபிடிப்பின் விளைவாக, பல மணி நேரம் பலர் செய்யும் வேலையை குறைந்த நேரத்தில் இயந்திரமே செய்யும் சூழல் உருவானது. 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தொழில் புரட்சி நீராவிக்கு பதில் மின் சக்தியை பயன்படுத்தி இயந்திரங்களை இயக்க செய்ததாகும். 20 ஆம் நூற்றாண்டில் மூன்றாவது தொழில் புரட்சி மின்னனு மற்றும் தகவல் தொழில் நுட்பத்தைக்கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரம் என்ன செய்ய வேண்டும் என்பதை Programme செய்திடுதலாகும். 21 ஆம் நூற்றாண்டில் வந்திருக்கும் நான்காவது தொழில் புரட்சி செயற்கை நுண்ணறிவு.

இப்படி ஒவ்வொரு முறை புரட்சிகள் பிறக்கிற போதும் பிரச்சனைகளும் அதோடு கூட ஒட்டிப் பிறப்பது இயல்பான ஒன்று. அந்த விதத்தில், கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக விளைந்த தகவல் தொழில்நுட்ப மற்றும் செயற்கை நுண்ணறிவு புரட்சியின் விளைவாக உருவாகியிருக்கிற ஒரு புதிய பிரச்சனை "**தகவல் மாசுபாடு**" (Data Pollution).

தகவல் மாசுபாடு: (Data Polution)

காற்று, நீர், மண், ஒலி, ஒளி போன்றவற்றுடன் சுற்றுச்சூழலுக்கு தீங்கிழைக்கும் எந்த ஒரு பொருளும் கலக்கும் போது அதனை மாசு என்கிறோம்.

காற்று மாசுபாடு என்பது புகை, துகள்கள், வாயுக்கள் போன்றவைகள் காற்றுடன் கலப்பதால் ஏற்படுகின்றது.

நீர் மாசுபாடு என்பது தொழிற்சாலை கழிவுகள், விவசாய கழிவுகள், மனிதக் கழிவுகள் நீருடன் கலப்பதால் நிகழ்வது.

மண் மாசுபாடு என்பது இரசாயனங்கள், கழிவுகள் மண்ணுக்குள் கலப்பதால் ஏற்படுவது.

ஒலி மாசுபாடு என்பது அதிக சத்தத்தால் விளைவது.

ஒளி மாசுபாடு என்பது அதிகமான வெளிச்சத்தை உண்டு பண்ணுவதால் உருவாகிறது.

இவையாவும் நாம் அறிந்த பிரச்சனைகள். ஆனால் இன்றைய நவீன யுகத்தில் பிறந்திருக்கிற இந்த "தகவல் மாசுபாடு" என்பது நாம் அறியாமலே நம்மை ஆழித்துக் கொண்டிருக்கிற ஒரு அடிப்படையான பிரச்சனை.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த 21 ஆம் நூற்றாண்டை தகவல் யுகம் என்கிறோம். இன்று நம்மை அறியாமலேயே, ஏன் நாம் விரும்பாமலேயே எண்ணிக்கையில்லா தகவல்கள் (Data) நம் முன்னால் ஒவ்வொரு நொடியும் நம் தேவைக்கு அதிகமாக மலை போலக் கொட்டிக்கிடக்கின்றன. தகவல்களால் சூழப்பட்டு, தகவல்களால் ஆளப்பட்டு, இன்று தகவல்களாகவே நாம் மாறிக்கொண்டிருக்கிறோம்.

தடையில்லா மற்றும் தரமில்லா தகவல்களின் விளைவு

கடந்த காலங்களில் நாம் தகவல்களைப் பெறுவதற்கு ஆசிரியர்கள், நூல்கள், அறிஞர்களைச் சார்ந்திருந்தோம். அதன் பிறகு வானொலி, தொலைக்காட்சி, இதழ்கள் போன்றவற்றை சார்ந்திருக்கிற காலம் வந்தது. இன்று பெரும் பாய்ச்சலாக கணினி, இணையம், திறன் பேசி, செயற்கை நுண்ணறிவு போன்றவற்றின் காலத்துக்குள் நுழைந்து நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைய தகவல் தொழில் நுட்ப யுகத்தில் தொழில்நுட்பமும், ஊடகங்களும் நமக்குத் தேவையான, தேவையற்ற, தேவைக்கு அதிகமான தகவல்களை அள்ளிக் கொண்டுவந்து நம் மூளைக்குள் கொட்டி நமது சிந்தனைகளை மாசடையச் செய்து கொண்டிருக்கின்றன. உண்மை எது, பொய் எது என்று பிரித்தறிந்து தெளிவுபெற முடியாத வகையில் இன்று மாசடைந்த தகவல்களால் ஒவ்வொரு நொடியும் நாம் மாசடைந்து கொண்டிருக்கிறோம்.

"உண்மை ஊர்ந்து செல்லும் பொய் பறந்து செல்லும்" என்பார்கள் "உண்மை புல்லாங்குழல் ஊதுகிறது பொய் முரசு கொண்டுகிறது" என்பார் வைரமுத்து.

இணையத்தில் கொட்டிக்கிடக்கும் தகவல்களை தேர்வு செய்வதில் பெரும் குழப்பம் ஏற்படுகின்றது. நாளைய தலைமுறையினர் வாசிக்க இருக்கிற வரலாறு என்பது பொய்யும், புரட்டலும் நிறைந்த புணைச்சுருக்களின் தொகுப்பாக இருந்துவிடுமோ என்ற ஐயம் எல்லோருக்குள்ளும் எழுவதை உணரமுடிகிறது.

இன்று நம் கையில் இருக்கும் திறன்பேசி நொடிப்பொழுதில் நம்மை இந்த பேருலகுடன் இணைத்துவிடுகின்றது என்பது மகிழ்ச்சியான கொடையா? அல்லது ஒரு துயரமான சாபமா? என்பது பகுத்தறிய முடியாததாகவே உள்ளது. ஏனெனில் இன்று தகவல் வெளியில் (Data Space) தனியுரிமை (Privacy) என்கின்ற ஒன்றே கிடையாது. மனிதர்கள் தங்கள் அந்தரங்கத்தை இழந்துவிட்டார்கள் என்பது தான் எதார்த்தமான உண்மை. நம்முடைய ஒவ்வொரு நகர்வும், ஒவ்வொரு பேச்சும் கண்காணிக்கப்படுகிறது, பதிவு செய்யப்படுகிறது என்பதை அறியாமலேயே திறன்பேசிகளை செல்லும் இடம் எல்லாம் சுமந்துகொண்டு செல்கிறோம். நமது நகர்வை, நமது குரலை, நமது பதிவை எங்கோ, எவனோ கேட்டுக்கொண்டு, பார்த்துக்கொண்டு, பதிவு செய்து நம்மை பின் தொடர்ந்து

கொண்டேதான் இருக்கின்றான் என்று உணராமலே நாம் இரையாகிக் கொண்டிருக்கிறோம். திறன் பேசிகளில் நாம் பதிவிடுவது, பதிவிறக்கம் செய்வது, அழிப்பது, காண்பது, ஒலிகள் அனைத்துமே தகவல் வடிவில் கட்புலனாகாத பெருவெளியில் அழியாமல் சேமித்துவைக்கப்பட்டு கொண்டிருக்கிறது. ஒருவனை வீழ்த்த அவனை ஆழ தெரித்திருத்தல் அவசியம். அந்த விதத்தில், இன்று நம்மைப் பற்றி சேர்த்து வைக்கப்பட்ட தகவல் தரவுகள் நம்மை மெல்ல மென்று விழுங்கிக் கொண்டிருப்பது நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய ஒரு உண்மை.

"சிந்தனையே" நம் இருப்பின் மூலம்

Cogito ergo sum

I think. Therefore I am

"நான் நினைக்கிறேன். எனவே நான் இருக்கிறேன்" என்றார் பிரெஞ்சு தத்துவ ஞானி ரெனே டெக்கார்ட்ஸ்.

கடந்த காலங்களில் நிகழ்ந்த தொழில் புரட்சிகள் மனிதனின் உடல் உழைப்பு குறைய வழியாக அமைந்தன. ஆனால் இன்று நிகழ்ந்து கொண்டிருக்கிற செயற்கை நுண்ணறிவு புரட்சி, மனிதனின் சிந்திக்கிற திறனை மழுங்கடிக்க செய்து கொண்டிருக்கின்றது. செயற்கை நுண்ணறிவால் சிந்திக்கிற தேவை இன்று குறைந்திருக்கிறது. அதன் விளைவாக சிந்திக்கிற திறனும் இன்று தேவையற்ற ஒன்றாக மாறி நிற்கின்றது. இது ஒரு பேரழிவின் தொடக்கம் என்பதை நாம் உணர வேண்டியது அவசியம். வரலாற்றின் பக்கங்களை புரட்டி பார்க்கிற போது மனித இன வளர்ச்சியின் மூலதனமே "சிந்தனைதான்" என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். மனிதன் சிந்திப்பதை குறைத்துக் கொண்டால் அவனது இருப்பு கேள்விக்குறியாகும் என்பது உறுதி.

அதிலும் இன்று மூளை அழுகல் (Brain Rot) பிரச்சனையால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் பெருகிக்கொண்டிருக்கிறது. இந்த பாதிப்புக்கான அடிப்படைக் காரணம் "அதீத அலைபேசி மற்றும் சமூக உடகப் பயன்பாடு". தினமும் ஒருவர் தொடர்ந்து பல மணி நேரம் அலைபேசியில் பொழுதுபோக்கிற்காக வீடியோக்களையும், ரீல்ஸ்களையும் Scroll செய்து பார்த்துக் கொண்டிருக்கிற போது, அதில் கொட்டிக் கிடக்கிற தேவையற்ற தகவல்களால் மூளை மாசைடைந்து, இந்த மூளை அழுகல் ஏற்படுகின்றது. இது சீரற்ற சிந்தனை, கவனச்சிதறல், கற்பனைத் திறன் குறைபாடு, பகுத்தறிவதில் பிரச்சனை போன்ற பலவற்றிற்கு காரணமாக அமைகின்றது.

எனவே இந்த நவீன யுகத்தில் தகவல் மாசுபாட்டிலிருந்து நம்மையும், நம் சமூகத்தையும் காத்துக்கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவரின் பொறுப்பு. அலைபேசி மற்றும் சமூக ஊடகப் பயன்பாட்டை குறைப்பது, நல்ல நூல்களை வாசிப்பது, புதிய மொழிகளைக் கற்றுக் கொள்வது, உடல் பயிற்சி, விளையாட்டு ஆகியவற்றில் ஈடுபடுவது போன்றவற்றால் நம் மூளையை மாசடையாமல் காத்து சுறுசுறுப்போடு வைத்துக்கொள்வது நமது கடமையாகும். சிந்திப்பதால் நாம் இருக்கிறோம், நம் இருப்பை காத்துக்கொள்ள தொடர்ந்து சிந்திப்போம். தகவல் மாசுபாட்டிலிருந்து நம்மை தற்காத்து நல்லதொரு எதிர்காலத்தை நமதாக்குவோம்.

நவீனத்தில் நலிவடையாமல், நவீனமயமாவோம்!!!

வாழ்த்துகளுடன்,


+ ஆயர் A. ஜீவானந்தம்

Bishop's Programme – OCTOBER 2025

Date	Day	Time	Programme
15	Wed	11:30 a.m.	Memorial Mass: Ayyampet
16	Thu	10:30 a.m.	Mass at FIHM Provincialate: Trichy
		03:30 p.m.	Meeting at PSSS: Perambalur
17	Fri	09:30 a.m.	Feast Mass at LFHS School: Kumbakonam
18	Sat	09:30 a.m.	Legion of Mary New Curia Inauguration, Achanur
21	Tue	11:30 a.m.	Memorial Mass: Trichy
23	Thu	10:00 a.m.	Month's Mind Mass: Kulamanickam
27	Mon		Half Yearly Board Meeting at St Peter's Seminary: Bangalore
28	Tue	09:30 a.m.	Policy Drafting Committee Meeting: Bishop's House
29-30		Wed & Thu	Junior Clergy Seminar: Kotagiri

திருத்தந்தையோடு மன்றாடுவோம்

அக்டோபர்: பல்வேறு சமய மரபுகளுக்கு இடையிலான ஒத்துழைப்புக்காக...



அமைதி, நீதி மற்றும் மானுடச் சகோதரத்துவத்தைப் பாதுகாத்து ஊக்கப்படுத்திட. மாறுபட்ட சமய மரபுகளை நம்புபவர்கள் இணைந்து பணியாற்ற நாம் மன்றாடுவோம்.

BIRTHDAY

01.10.1967	Fr. A. Leo Dominic Nallus Raja	Perumalpalayam
02.10.1950	Fr. A. Santiagu	Kallakudi
03.10.1978	Fr. B. Robert	USA
04.10.1976	Fr. K. Arokiasamy	No.1, Tolgate
06.10.1949	Fr. S. Selvarayar	Thogur
07.10.1991	Fr. A. Bruceline Binith	Kumbakonam
09.10.1994	Fr. A. Arokia Jayaseelan	Kumbakonam
10.10.1977	Fr. K. Robert	Thottiam
11.10.1963	Fr. I. Adaikalasamy	Andimadam
13.10.1984	Fr. M. Albert Pushparaj	Thirukavalur
13.10.1984	Fr. D. David Rajesh	Kumbakonam
14.10.1959	Msgr. M. Philomindas	Kumbakonam
15.10.1950	Fr. A. Soosaimanickam	Thenpakkam
15.10.1984	Fr. T. Jestin Prathap	Germany
18.10.1960	Fr. A. Xavier	Lalgudi
18.10.1979	Fr. C. Denis Amirtharaj	Kumbakonam
20.10.1970	Fr. P. J. Samson	Poondi
23.10.1954	Fr. S. Lourdusamy	Kumbakonam
23.10.1977	Fr. P. Singarayar	Milan
24.10.1984	Fr. M. Francis Amaladoss	Manathidal
24.10.1964	Fr. V. Christuraj Maria Susai	Noothapur

26.10.1960	Fr. T. Devadoss	Kumbakonam
26.10.1983	Fr. A. Arul Sebastian	Kumbakonam
27.10.1972	Fr. C. Joseph Christuraj	Pudukottai
29.10.1957	Fr. M. Antonisamy	Thogur

NECROLOGY

06.10.1984	Rev. Fr. D. Peter Amalraj	Periyavarseeli
10.10.1957	Rev. Fr. S. Ambrose	Kumbakonam
12.10.2003	Most Rev. Fr. D. Paul Arulsamy	Kumbakonam
14.10.2020	Rev. Fr. M. Philip Santiagu	Kumbakonam
16.10.1990	Rev. Fr. R. Arputham	Kumbakonam
17.10.1995	Rev. Fr. D. Gnanapragasam	Aachanur
18.10.2013	Rev. Fr. N. Arulsway	Thondamanthurai
19.10.1992	Rev. Fr. A. Ignatius	Chennai
20.10.2010	Rev. Fr. R. K. Pappusamy	Kumbakonam
23.10.1944	Rev. Fr. P. S. Ignacinathar	Kumbakonam
31.10.1967	Rev. Fr. Maria Francis	Kumbakonam

ORDINATION DAY

12.10.1977	Fr. S. Daveedhu	Kumbakonam

ANNUAL CLERGY RETREAT-2025
DIOCESE OF KUMBAKONAM

Dear and Rev.Fathers,

As communicated in the News-letter, September 2025, I would like to remind you of the forthcoming Annual Clergy Retreat scheduled in the Second and Third week of November 2025 in the Poondi Madha Retreat cum Worship Centre, Poondi.

The First Batch will commence on 09-11-2025 Sunday evening and will get over by 14-11-25 Friday afternoon. And the Second Batch will begin the retreat on 16-11-25 Sunday evening and will end on 21-11-25 Friday afternoon.

As evident, all the diocesan priests are to make this spiritual exercise without fail to renew their life of commitment (can.276/4º). As it is a closed retreat, it is not allowed to accept any other commitment outside during the retreat days.

Those priests who are unable to attend the Annual Retreat for serious reason, must obtain permission from the Bishop and inform him about the alternative arrangement done to make their retreat during the year.

The lists of priests for the two Batches are printed here below. If any of our priests who likes to change the Batch, is kindly requested to inform the Secretary to the Bishop well in advance so that the lists can be finalized accordingly.

List of the Priests for the Annual Retreat - 2025 (Batch - I)
November 9th to 14th (Sunday Evening to Friday Afternoon)

Names of Priests	Dates of their Ordination
1. Rev. Fr. A. Michaelsamy	16.04.1964
2. Rev. Fr. M. A. Sebastian	14.04.1969
3. Rev. Fr. A. Packiasamy	19.07.1976
4. Rev. Fr. S. I. Arulsamy	29.06.1977
5. Rev. Fr. A. Santiagu	07.07.1978
6. Rev. Fr. P. Henry Pushparaj	07.06.1978
7. Rev. Fr. J. John Pannerselvam	27.12.1980
8. Rev. Fr. G. Michael	27.05.1980
9. Rev. Fr. L. Benjamin	15.03.1983
10. Rev. Fr. C. Peter Francis	15.06.1983
11. Rev. Fr. C. Kulandai	04.05.1984
12. Rev. Fr. M.A. Thanaraj	04.05.1984
13. Rev. Fr. S. Augustine	08.06.1985
14. Rev. Fr. A. Maria Francis	08.06.1985
15. Rev. Fr. A. Martin De Porres	08.06.1985
16. Msgr. M. Philomindas	12.05.1986
17. Rev. Fr. T. Devadoss	13.05.1987
18. Rev. Fr. A. Xavier	13.05. 1987
19. Rev. Fr. M. Antonysamy	13.05.1988
20. Rev. Fr. M. Francis	13.05.1988
21. Rev. Fr. I. Mariadoss	20.04.1989
22. Rev. Fr. S. Gaspar	20.04.1989
23. Rev. Fr. G. Cosmon Arokiaraj	06.05.1990
24. Rev. Fr. V. I. Peter	06.05.1991
25. Rev. Fr. I. Adaikalasamy	27.04.1992
26. Rev. Fr. I. Albert	27.04.1992
27. Rev. Fr. A. Arokia Kennedy Rayan	27.04.1992
28. Rev. Fr. M. Kulandairaj	26.04.1993

29.	Rev. Fr. M. Dominic Savio	18.04.1995
30.	Rev. Fr. P. J. Samson	11.04.1997
31.	Rev. Fr. A. Arockiasamy	22.12.1998
32.	Rev. Fr. J. Michaelraj	14.04.1998
33.	Rev. Fr. A. Deva Varaprasadam	14.04.1998
34.	Rev. Fr. A. Maria Louis	12.04.1999
35.	Rev. Fr. S. Vincent	12.04.1999
36.	Rev. Fr. E. Adaikalasamy	12.04.1999
37.	Rev.Fr. U. S. Arockiasamy	23.04.2001
38.	Rev. Fr. A. John Britto	29.04.2002
39.	Rev. Fr. P. Augustine	29.04.2002
40.	Rev. Fr. C. Joseph Christuraj	28.04.2003
41.	Rev. Fr.A. Arockia Sahayaraj	28.04.2003
42.	Rev. Fr. S. Don Bosco	02.05.2005
43.	Rev. Fr. J. Amarsingh Eliyazer	02.05.2005
44.	Rev. Fr. S.Felix Samuel	02.05.2005
45.	Rev. Fr. S. Mariadoss	02.05.2005
46.	Rev. Fr. K. Xavier	02.05.2005
47.	Rev. Fr. A. Augustine Peter	01.05.2006
48.	Rev. Fr. S. Joseph Kennedy	01.05.2006
49.	Rev. Fr. V. E. Santha Kumar	01.05.2006
50.	Rev. Fr. U. Rajendra Seker	16.04.2007
51.	Rev .Fr. W. Adaikalaraj	24.07.2008
52.	Rev. Fr. V. I. Adaikalasamy	24.07.2008
53.	Rev. Fr. D. Barnabass	24.07.2008
54.	Rev. Fr. A. Eugin Tony	24.07.2008
55.	Rev. Fr. A. William Fernandez	19.04.2009
56.	Rev. Fr. K. Amaidhi Arasu	19.04.2009
57.	Rev. Fr. S. Arockiadoss	12.05.2010
58.	Rev. Fr. R. S. Don Bosco	12.05.2010
59.	Rev. Fr. J. Bastin Britto	02.05.2011
60.	Rev. Fr. B. John Bosco	02.05.2011

61.	Rev. Fr. A. Susai Devanesan	11.09.2013
62.	Rev. Fr. M. Augustin	13.04.2015
63.	Rev. Fr. D. David Rajesh	13.04.2015
64.	Rev. Fr. M. Francis Amaladoss	13.04.2015
65.	Rev. Fr. J. Arul Don Bosco	04.04.2016
66.	Rev. Fr. A. Victor Lawrence	09.04.2018
67.	Rev. Fr. S. Johnson	09.04.2018
68.	Rev. Fr. J. Arockia Rajesh	29.04.2019
69.	Rev. Fr. V. Edward William	09.08.2020
70.	Rev. Fr. S. Anburaj	26.04.2022
71.	Rev. Fr. S. Arul Francis	28.04.2025

List of the Priests for the Annual Retreat - 2025 (Batch - II) November 16th to 21st (Sunday Evening to Friday Afternoon)

Names of Priests	Dates of their Ordination
1. Rev. Fr. A. Antoine	20.12.1971
2. Rev. Fr. P. Joseph	11.06.1973
3. Rev. Fr. R. Vincent Ferrer	30.06.1975
4. Rev. Fr. A. Samson	07.06.1978
5. Rev. Fr. S. Selvarayar	07.06.1978
6. Rev. Fr. M. Stanislaus	27.05.1980
7. Rev. Fr. P. Thangasamy	27.05.1980
8. Rev. Fr. A. Soosaimanickam	13.05.1981
9. Rev. Fr. S. Lourdusamy	15.01.1982
10. Rev. Fr. S. Soosainathan	04.05.1984
11. Rev. Fr. A. Santhanam	12.05.1986
12. Rev. Fr. A. Francis	13.05.1987
13. Rev. Fr. R. Peter Arokiadoss	13.05.1987
14. Rev. Fr. J. Antony Joseph	13.05.1988
15. Rev. Fr. D. Antony Solomon	06.05.1990
16. Rev. Fr. L. Mariadoss	06.05.1991
17.. Rev. Fr. K. Kaspar	27.04.1992

18.	Rev. Fr. A. Sahayaraj	27.04.1992
19.	Rev. Fr. A. Leo Dominic Nallus Raja	18.04.1995
20.	Rev. Fr. G. Christuraj	15.04.1996
21.	Rev. Fr. A. Roch Alexander	15.04.1996
22.	Rev. Fr. L. Robert Selvan	15.04.1996
23.	Rev. Fr. M. A. Susaimanickam	15.04.1996
24.	Rev. Fr. S. John Kennedy	11.04.1997
25.	Rev. Fr. S. Innocent	11.04.1997
26.	Rev Fr. M. Joseph Dhanaraj	11.04.1997
27.	Rev.Fr. A. Jayaraj	22.12.1998
28.	Rev. Fr. S. Joseph Arockiaraj	12.04.1999
29.	Rev. Fr. A. Suvakin	12.04.1999
30.	Rev. Fr. M. Selvaraj	01.05.2000
31.	Rev. Fr. S. Alphonse	23.04.2001
32.	Rev. Fr. T. Divyanathan	29.04.2002
33.	Rev. Fr. S. Rajasekar	29.04.2002
34.	Rev. Fr. G. Arockiaraj	28.04.2003
35.	Rev. Fr. R. Jayaraj	28.04.2003
36.	Rev. Fr. S. A. Amalraj	22.04.2004
37.	Rev. Fr. J. Regis	02.05.2005
38.	Rev. Fr. A. Rajamanickam	02.05.2005
39.	Rev. Fr. A. Victor Paulraj	02.05.2005
40.	Rev. Fr. R. Frederick David	02.05.2005
41.	Rev. Fr. K. Robert	02.05.2005
42.	Rev. Fr. A. Antony	01.05.2006
43.	Rev. Fr. J. Ruban Antony Raj	01.05.2006
44.	Rev. Fr. V. Sahaya Christuraj	01.05.2006
45.	Rev. Fr. S. J. Soosai Manickam	01.05.2006
46.	Rev. Fr. I. Arokia Samy	16.04.2007
47.	Rev. Fr. A. Kulandai Nathan	16.04.2007
48.	Rev. Fr. K. Stephen Michaelraj	16.04.2007
49.	Rev. Fr. A. Jamesraj	16.04.2007
50.	Rev. Fr. K. Arockiasamy	24.07.2008

51.	Rev. Fr. J. Maria Jomicks Savio	24.07.2008
52.	Rev. Fr. A. Emmanuvel	19.04.2009
53.	Rev. Fr. I. John Kennedy	12.04.2010
54.	Rev. Fr. S. Albert Xavier	12.05.2010
55.	Rev. Fr. A. Thomas Simonraj	05.07.2010
56.	Rev. Fr. A. Benedict Dhiraviam	02.05.2011
57.	Rev. Fr. M. Joseph	02.05.2011
58.	Rev. Fr. E. Joseph Michaelraj	02.05.2011
59.	Rev. Fr. A. Mark Marcilin	02.05.2011
60.	Rev. Fr. V. Christuraj Maria Susai	28.12.2013
61.	Rev. Fr. D. Maria Alphonse Raja	28.04.2014
62.	Rev. Fr. A. Arul Sebastian	28.04.2014
63.	Rev. Fr. M. Albert Pushparaj	28.04.2014
64.	Rev. Fr. S. Arun Patrick Xavier	13.04.2015
65.	Rev. Fr. A. Marceline Antoniraj	13.04.2015
66.	Rev. Fr. G. Satheesh Yesudoss	13.04.2015
67.	Rev. Fr. G. Jayan	09.04.2018
68.	Rev. Fr. A. Irudayaraj	09.08.2020
69.	Rev. Fr. S. Belfit Antony	26.04.2022
70.	Rev. Fr. S. John Corneliyus	26.04.2022
71.	Rev. Fr. A. Arokia Jayaseelan	28.04.2025

DIOCESAN EDUCATIONAL SCHOLARSHIP

We have received 252 filled-in Educational Scholarship applications from 61 parishes. Out of the 252 applicants, 137 applicants are from the SC/ST communities and 115 are from the other communities. The applications will be screened by the Scholarship Committee along with the Bishop and decide the mode of distributing the Scholarship amount to the beneficiaries through the Parish priests. I sincerely thank the members of the Scholarship committee and all the parish priests for their interest to help the poor and deserving students encouraging them to pursue their studies by selecting them for the scholarship.

Msgr. M. Philomindas
Vicar General

FROM THE PROCURATOR'S OFFICE

Dear Rev. Fathers,

Greetings from Fr. J. Antony Joseph, Procurator!

The following is the list of Parishes, Institutions and Priests who have contributed their Slab and Contributions (September 2025):

Community Hall Contribution	
No. 1, Tollgate Parish	71,600
Contribution from Priests	
Fr. A. Isaias- from June 2024- June 2025	1,00,000
Salary contribution from teaching priests	
Fr. G. Arockiaraj - for August 2025	85,300
Fr. A. Arul Sebastian - for August 2025	47,540
Fr. A. Devavaraprasadam - up to Sep 2025	3,08,232
Fr. R. Frederick David - for August 2025.	74,000
Fr. U. Rajendra Sekar for August 2025	59,086
Fr. L. Robert Selvan - for June 2025	1,03,472
Mass Intention	
No. 1, Tollgate Parish	7500
Varadarajanpet Parish	20,000
Lalgudi Parish	15,000
Slab Contribution	
Kovandakurichi parish for 2025	35,001
Bishop's Education fund	
Kaniyiruppu	2000

Dear Rev. Fathers,

I am happy and grateful to all of you for your generous contributions towards the needs of our Diocese. In particular, I appreciate the

priests who have begun contributing the excess Mass intentions to the Diocese. This is a commendable practice, and I kindly encourage the other priests also to follow this good example.

I also wish to remind those who are in charge of school administration to deposit all collections made in the schools into the Trust account. At the same time, you are requested to send the monthly budget to the Trust Secretary at the end of every month. The same will be reimbursed to your account to meet the expenses of the following month.

Similarly, priests who are responsible for the marriage/community halls are requested to send the accounts by every quarter i.e., by the end of July, November, and March. Along with this, kindly remit without fail the share that is due to the Diocese.

Parish auditing is yet to commence. To make the process smooth and time-saving, I earnestly request all parish priests to keep the cash book and ledger properly updated, supported with bills and vouchers.

My sincere thanks for your cooperation and your willingness to strengthen the financial administration of our Diocese.

As the Mission Sunday is fast approching, I wish you to celebrate it creatively and meaningfully. Please try to inculcate among the people their prime responsibility to support evangelization.

Yours in Christ,
Fr. J. Antony Joseph,
Procurator.

வத்திகான் செய்திகள்

01.09.2025 ஆகஸ்டு 31, ஞாயிறு வத்திக்கான் வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய ஞாயிறு மூவேளை செப உரையின் இறுதியில் திருத்தந்தை பதினான்காம் லியோ, போரினால் பாதிக்கப்படும் உக்ரைன் மக்களுடன் நெருக்கமாக இருக்க வேண்டும் என்றும் உடனடி போர் நிறுத்தம் மற்றும் உரையாடலுக்கான தீவிர அர்ப்பணிப்புக்கான வேண்டுகோளை மீண்டும் வலியுறுத்துகின்றேன் என்றும் கூறினார். மேலும் ஆயுதங்களின் குரல் அமைதியாக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் உடன்பிறந்த உணர்வு மற்றும் நீதிக்கான குரல் எழுப்பப்பட வேண்டும் என்றும் எடுத்துக் கூறினார் திருத்தந்தை.

03.09.2025 செப்டம்பர் மாதத்திற்கான செபக்கருத்தாக "அனைத்து படைப்புக்களுடனான நமது உறவு" என்ற தலைப்பில் தனது கருத்துக்களையும் செபங்களையும் காணொளியாக வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

06.08.2025 திருஅவையின் இரு புதிய அருளாளர்கள்: செப்டம்பர் 6, சனிக்கிழமை திருஅவை இரண்டு அருளாளர்களைப் பெற்றுள்ளது என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், ஒருவர் எஸ்தோனியாவின் தாலினைச் சார்ந்தவரும் இயேசு சபையைச் சார்ந்தவருமான பேராயர் எதுவார்தோ (Edoardo Profittlich) மற்றும் ஹங்கேரியின் மரிய மதலேனா (Maria Maddalena Bódi) ஆகிய இருவரும் நற்செய்தியின் அழகுக்கு துணிச்சலான சாட்சிகளாகத் திகழ்கின்றார்கள் என்றும் கூறினார்.

07.09.2025 திருஅவையில் இரு புதிய புனிதர்கள்: செப்டம்பர் 7, ஞாயிறன்று வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் அருளாளர்களான பியர் ஜோர்ஜோ பிரசாத்தி மற்றும் கார்லோ அகுதீஸ் ஆகிய இருவரையும் புனிதர் நிலைக்கு உயர்த்தும் திருப்பலியானது, திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

09.09.2025 செப்டம்பர் 9, செவ்வாயன்று திருத்தந்தையரின் கோடை விடுமுறை இல்லமான காஸ்தல் கந்தோல்.போவிலிருந்து வத்திக்கான் இல்லம் திரும்பும் முன் செய்தியாளர்களுக்கு கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், "அமைதிக்காக கடுமையாக

ஜெபியுங்கள், உழையுங்கள்" என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், மத்திய கிழக்கில் என்ன நடக்கிறது என்பது குறித்து தனது கவலையை வெளிப்படுத்தினார்.

13.09.2025 செப்டம்பர் 13, சனிக்கிழமை பாரீசில் உள்ள நோத்ரே டேம் அன்னை மரியா ஆலயத்தில் கார்மேல் சபையைச் சார்ந்த 16 அருள்சகோதரிகள் புனிதர்களாக உயர்த்தப்பட இருப்பதற்கு நன்றி தெரிவித்து நிறைவேற்றப்பட்ட திருப்பலியில் பங்கேற்கும் மக்களுக்கு அனுப்பியுள்ள தந்திச்செய்தியில், "இறையியல் நம்பிக்கையால் இயக்கப்படும் கார்மேல் சபையினர், தங்கள் வாழ்க்கையின் மறைபொருளாம் பலனை நிச்சயமாகக் கொண்டுள்ளனர்" என்றும், "கிறிஸ்துவால் வழங்கப்பட்ட பாதையைப் பின்பற்றுவதன் வழியாக அன்புப் பணியினைப் பிறருக்கு வழங்குகின்றனர்" என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

15.09.2025 செப்டம்பர் 15, திங்களன்று மாலை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவிலில் நடைபெற்ற ஆறுதல் அளிப்பவர்களுக்கான யூபிலியில் பங்கேற்ற அனைவரையும் சந்தித்து உரையாற்றியபோது, "கண்ணீர் என்பது காயமடைந்த இதயத்தின் ஆழமான உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு மொழி என்றும், கண்ணீர் என்பது இரக்கம் மற்றும் ஆறுதலுக்கான ஒரு அமைதியான அழுகை" என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

17.09.2025 செப்டம்பர் 17 புதன்கிழமை முதல் 18 வியாழன் வரை கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெறும் உலக மற்றும் பாரம்பரிய மதங்களின் தலைவர்களுக்கான எட்டாவது மாநாட்டில் பங்கேற்பாளர்களுக்கு அனுப்பியுள்ள செய்தியில், "ஒருங்கிணைப்பு அனைத்து மனித குலத்திற்கும் நம்பிக்கையின் சக்திவாய்ந்த அடையாளமாக மாறுகிறது என்றும், மதம் என்பது மோதலின் ஆதாரம் அல்ல, மாறாக குணப்படுத்துதல் மற்றும் நல்லிணக்கத்தின் ஆதாரம் என்பதை வெளிப்படுத்துகிறது" என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

19.09.2025 செப்டம்பர் 19, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட தகவல்களின்படி திருவனந்தபுரம் சிரோ மலங்கரா தலத்திருஅவையைச் சார்ந்த அருள்பணியாளர் ஜான் குட்டியில் அவர்களை துணை ஆயராக உயர்த்தியதுடன் இத்தாலியின்

கனதா பகுதி பட்டம்-சார் ஆயராகவும் நியமித்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

21.09.2025 செப்டம்பர் 21, ஞாயிறு வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு ஞாயிறு மூவேளை செப உரையின் இறுதியில் வழங்கிய செப விண்ணப்பங்களின்போது, திருத்தந்தை பதினான்காம் லியோ "வன்முறை, கட்டாய நாடுகடத்தல் அல்லது பழிவாங்கல் ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்காலம் இல்லை என்றும், மக்களுக்கு அமைதி தேவை அவர்கள் உண்மையிலேயே அமைதிக்காக உழைக்கிறார்கள், அமைதியை அன்பு செய்கின்றார்கள்" என்றும் கூறினார்.

22.09.2025 செப்டம்பர் 22, திங்களன்று வத்திக்கானின் கொன்சிஸ்தோரோ அறையில், புனித பவுல் சாட்ரஸ் சபை (79), சலேசிய சபை (25), புனித கேத்தரின் சபை (45), புனித பூமியின் கார்மலேட் சபை (25) அருள்சகோதரிகள் ஏறக்குறைய 175 பேரைச் சந்தித்தபோது, "பணியாற்றுவதற்கான ஆற்றல் கடவுளிடமிருந்து வரும் போது அனைத்தும் சாத்தியம்" என்றும், "நமது பணிகள் கடவுளின் கரங்களில் உள்ளன, 'நாம் பயனற்ற பணியாளர்கள் நம் கடமையைத்தான் செய்தோம்" என்று வலியுறுத்தும் நற்செய்தியின் வரிகளுக்கேற்ப நாம் வாழவேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

24.09.2025 செபமாலை செபிக்க திருத்தந்தையின் அழைப்பு: அன்புள்ள சகோதர சகோதரிகளே, அக்டோபர் மாதம் நெருங்கி வருகிறது, திருஅவையில் குறிப்பாக புனித செபமாலை அன்னைக்கு இந்த மாதம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. எனவே, வரும் மாதத்தின் ஒவ்வொரு நாளும், தனிப்பட்ட முறையில், குடும்பங்களில் மற்றும் சமூகங்களில் அமைதிக்காக செபமாலை செபிக்க அனைவருக்கும் அழைப்பு விடுத்தார் திருத்தந்தை.

28.09.2025 செப்டம்பர் 28, ஞாயிறு வத்திக்கான் வளாகத்தில் நடைபெற்ற திருப்பலியின் நிறைவில் வழங்கிய மூவேளை செப உரையின்போது, திருத்தந்தை பதினான்காம் லியோ "இறையியல் புதுப்பித்தலுக்கும் கிறிஸ்தவ கோட்பாட்டின் வளர்ச்சியைப் புரிந்துகொள்வதற்கும் தீர்க்கமான பங்களிப்பை வழங்கிய புனித ஜான் ஹென்றி நியூமனுக்கு திருஅவையின் மறைவல்லுநர் என்ற பட்டத்தை வழங்க இருப்பதில் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்தார்."

இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்

24.08.2025 வடகரை பங்கில் இளைஞர் ஞாயிறானது கொடியேற்றி திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் இளைஞர் இயக்க பொறுப்பாளர்கள் மற்றும் கிளைகிராம இளைஞர் பிரதிநிதிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மேலும் இதில் பங்குத்தந்தை மற்றும் இளைஞர் பணிக்குழு செயலர், ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் பங்கேற்றனர்.

24.08.2025 இளைஞர் பணிக்குழு அலுவலகத்தில், கும்பகோணம் மறைவட்ட பங்கு இளைஞர் இயக்க பொறுப்பாளர் களுக்கான கூட்டம் நடைபெற்றது. இதில் அனைத்து பங்கு இயக்க தலைவர்களும் கலந்து கொண்டனர்.

25.08.2025 குடந்தை மறைவட்ட அளவில் நடைபெற்ற இளைஞர் ஞாயிறு கொண்டாட்ட நிகழ்விற்கான அழைப்பிதலானது குவனெல்லா நகர், மாத்தூர், நாச்சியார் கோவில், வில்லியவரம்பில், அம்மன்பேட்டை ஆகிய பங்குகளுக்கு சென்று பங்குத்தந்தையர்களிடம் கொடுக்கப்பட்டது.

26.08.2025 இளைஞர் ஞாயிறு கொண்டாட்ட நிகழ்விற்கான அழைப்பிதலானது அய்யம்பேட்டை, பாபநாசம், காணியிருப்பு, கபிஸ்தலம் ஆகிய பங்குகளுக்கு சென்று பங்குத்தந்தையர்களிடம் கொடுக்கப்பட்டது.

27.08.2025 இளைஞர் ஞாயிறு கொண்டாட்ட நிகழ்விற்கான அழைப்பிதலானது எஸ். புதூர், வடகரை, கும்பகோணம் ஆகிய பங்குகளுக்கு சென்று பங்குத்தந்தையர்களிடம் கொடுக்கப்பட்டது.

28.08.2025 இளைஞர் ஞாயிறு கொண்டாட்ட நிகழ்விற்கான அழைப்பிதலானது வலங்கைமான் பங்கிற்கு சென்று பங்குத்தந்தையிடம் வழங்கப்பட்டது.

30.08.2025 இளைஞர் இயக்க பொறுப்பாளர் மற்றும் மறைவட்ட நிர்வாகக் குழு கூட்டமும் மேலும் இளைஞர் ஞாயிறு கொண்டாட்ட நிகழ்விற்கான முன் தயாரிப்புகளும் மறைபணி நிலையத்தில் நடைபெற்றன.

31.08.2025 குடந்தை மறைவட்ட அளவில் இளைஞர் ஞாயிறு கொண்டாட்ட நிகழ்வினை, காலை 9.30 மணியளவில் மறைபணி நிலைய இயக்குநர் தந்தை அருள்பணி. இராஜமாணிக்கம் அவர்கள் கொடியேற்றி தொடங்கி வைத்தார். அதைத் தொடர்ந்து மறைமாவட்ட முதன்மை தந்தை பேரருட்திரு. M. பிலோமின்தாஸ் தலைமை ஏற்று சிறப்புரை வழங்கினார். இந்நிகழ்வினை ஒருங்கிணைத்த இளைஞர் பணிக்குழு செயலர் தந்தை அவர்கள் இளைஞர் ஞாயிறு குறித்து துவக்க உரை வழங்கி அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து முதல் அமர்வினை ஜான் பிரவின் அவர்கள் வழிநடத்தினார். இரண்டாம் அமர்வினை வழக்கறிஞர் கார்த்திகேயன் அவர்கள் வழிநடத்தினார். முன்றாம் அமர்வினை அருள்பணி பாஸ்டின் பிரிட்டோ அவர்கள் வழிநடத்தினார். மதிய உணவு இடைவேளைக்கு பிறகு இளைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து 3 மணியளவில் நடைபெற்ற குழுகலந்தாய்வு அமர்வினை அருள்பணி. பெல்பிட் ஆண்டனி அவர்கள் வழிநடத்தினார். பிறகு 4 மணியளவில் இளைஞர் ஞாயிறு திருப்பலி பேராலயத்தில் நடைபெற்றது. நிகழ்வின் இறுதியாக வந்திருந்த அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

05.09.2025 மைக்கேல்பட்டி மறைவட்ட அருள்தந்தையர்களை சந்தித்து பூண்டியில் நடைபெற இருந்த இளைஞர்களுக்கான செயற்கை நுண்ணறிவு தொடர்பான நிகழ்வினை குறித்து விளக்கம் கொடுக்கப்பட்டது.

08.09.2025 மைக்கேல்பட்டி மறைவட்டத்தில் உள்ள பங்குகளை சந்தித்து பங்குதந்தையர்கள் மற்றும் இளைஞர்களுக்கு அழைப்பிதல் கொடுக்கப்பட்டது.

10, 11. 09.2025 பூண்டி தியான இல்லத்தில் செயற்கை நுண்ணறிவு குறித்து இளைஞர்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் நிகழ்வுக்கான முன்னேற்பாடுகள் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து அனைத்து இளைஞர் இயக்க பொதுக்குழுவுக்கான கூட்டம் நடைபெற்றது.

13, 14.09.2025 காலை 9.30 மணியளவில் பூண்டி தியான இல்லத்தில் இளைஞர்களுக்கான செயற்கை நுண்ணறிவு பயிற்சி தொடக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மைக்கேல்பட்டி, மறைவட்ட முதன்மை தந்தை பேரருட்திரு. இன்னொசென்ட் அவர்கள் பங்கேற்று தொடங்கிவைத்தார். மேலும் இந்நிகழ்வில் சுக்காம்பார் பங்குத் தந்தை அருள்பணி. ஜான் பன்னீர் செல்வம், நடுவலூர் பங்குத் தந்தை அருள்பணி. டோமினிக் சாவியோ, ஆச்சனூர் பங்குத் தந்தை அருள்பணி. மரிய ஜோமிக்ஸ் சாவியோ, திருப்பந்துருத்தி பங்குத் தந்தை அருள்பணி. பெனடிக்ட் திரவியம், பவனமங்களம் பங்குத் தந்தை அருள்பணி. திவ்விய நாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர். நிகழ்வின் தொடக்கத்தில் பணிக்குழு செயலர் அருள்பணி. ஜான் கொர்னேலியுஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த பயிற்சி வகுப்புகளில் 70 இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் பங்கேற்று பயன்பெற்றனர். இந்த பயிற்சி பாசறையானது மாதா தொலைக்காட்சி குழுவினர்கள் அருள்பணி. பவுலா செயக்குமார் மற்றும் அருள்பணி. ஜெனிபர் ஆகியோரால் சிறப்பாக வழிநடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கும்பகோண மறைவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பங்கேற்று நிகழ்வினை ஏற்பாடு செய்தனர்.

கடந்த 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற குடந்தை மறைவட்ட இளைஞர் இயக்க செயற்குழு கூட்டத்தில் மறைவட்ட நிர்வாக்குழு தேர்தல் நடைபெற்றது. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் விவரம் பின்வருமாறு

பெயர்	பொறுப்பு	பங்கு
செல்வன். ஆகாஷ்	மறைவட்ட தலைவர்	செம்போடை
செல்வன். ஷாம்	மறைவட்ட து. தலைவர்	வலங்கைமான்
செல்வி. கனிமொழி	மறைவட்ட செயலர்	வடகரை
செல்வன். ராபர்ட்	மறைவட்ட து. செயலர்	நாச்சியார்கோயில்
செல்வி. ரக்ஷனா	பொருளர்	காணியிருப்பு
செல்வன். ஸ்டீபன்	ஆண் பிரதிநிதி	கபிஸ்தலம்
செல்வி. அன்பரசி	பெண் பிரதிநிதி	ஒன்பத்துவேலி

எதிர்வரும் காலங்களில் கும்பகோணம் மறைவட்ட அளவில் இளைஞர் பணிக்குழுவில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் இவர்கள் முன்னின்று செயல்படுவார்கள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அக்டோபர் மாதம் திருமணத் தயாரிப்புப் பயிற்சி நடைபெறும் இடங்கள்

வ.எண்.	தேதி	இடம்
1	அக்டோபர் 04 மற்றும் 05 சனி மற்றும் ஞாயிறு	குழந்தை இயேசு திருத்தலம் நம்பர்-1, டோல்கேட், திருச்சி
2.	அக்டோபர் 19 மற்றும் 20 சனி மற்றும் ஞாயிறு	அருளானந்தர் மறைப்பணி நிலையம், கும்பகோணம்

இவண்,

அருள்பணி S. ஜான் கொர்னேலியுஸ்,

செயலர், இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்.

மறைக்கல்வி, நற்செய்தி அறிவிப்பு மற்றும் பெஸ்கி கலைக்குழு பணிக்குழுக்கள்

மறைக்கல்வி

01.09.2025 அய்யம்பேட்டை பங்கிலுள்ள ஆறு பள்ளிகளிலும் மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடத்தில் ஆண்டாய்வு நடைபெற்றது.

02.09.2025 அம்மன்பேட்டை பங்கிலுள்ள மூன்று பள்ளிகளிலும் மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடத்தில் ஆண்டாய்வு நடைபெற்றது.

03.09.2025 கும்பகோணம், புனித வளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, புனித வளனார் தொடக்கப்பள்ளி மற்றும் புனித அகுஸ்தினார் நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடத்தில் ஆண்டாய்வு நடைபெற்றது.

09.09.2025 கும்பகோணம், ஆர்.சி. பட்டு நூல் தொடக்கப்பள்ளி, ஆர்.சி. விடிவெள்ளி தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மாத்தூர், புனித ஜெயங்கொண்ட மாதா நடுநிலைப்பள்ளி மற்றும் வடகரை, ஆர்.சி. தொடக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளில் மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடத்தில் ஆண்டாய்வு நடைபெற்றது.

11.09.2025 கும்பகோணம், புனித அன்னாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சிறிய மலர் மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி, புனித மதர் கிளாரக் மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடத்தில் ஆண்டாய்வு நடைபெற்றது.

மேற்கூறிய பள்ளிகளில் நடைபெற்ற ஆண்டாய்வின் போது மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடத்தின் முக்கியத்துவம் குறித்தும், இது வாழ்க்கைக்கான பாடம் என்பதனையும் எடுத்துக் கூறி தொடர்ந்து இந்த பாடங்களை ஆர்வம் குறையாமல் நடத்துமாறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. ஏறக்குறைய 20 பள்ளிகளில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

13.09.2025 குடந்தை புனித அருளானந்தர் மறைப்பணி மையத்தில் குடந்தை மறைவட்டத்தை சார்ந்த பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஒருநாள் தியானம் நடைபெற்றது. இத்தியானத்தை மறைமாவட்ட முதன்மை தந்தை பேரருட்திரு M. பிலோமின்தாஸ் அவர்கள் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்கள்.

15.09.2025 - 31.09.2025 இனி வரக்கூடிய நாட்களில் ஆண்டாய்வு நடைபெற இருக்கிற பள்ளிகளுக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பும் பணி நடைபெற்றது.

பெஸ்கி

அருள்பணி. யூஜின் டோனி அவர்கள் 14.09.2025 அன்று குடந்தை புனித அலங்கார அன்னை பேராலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியும், 23.09.2025 அன்று கும்பகோணம், புனித கார்மேல் கன்னியர் இல்லத்தில் நிறைவேற்றிய திருப்பலியும் பெஸ்கி கலைக்குழுவால் ஒலி, ஒளிப்பதிவு செய்யப்பட்டு மாதா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட உதவி செய்யப்பட்டது.

23.09.2025 மறைமாவட்ட மறைபணி நிலைய இயக்குநர் அருள்தந்தை இராஜமாணிக்கம் அவர்களால் தயாரிக்கப்பட்ட புனித உத்தரிய மாதா பாடல் தகட்டினை

சிடி) நம் மறைமாவட்ட ஆயர் A. ஜீவானந்தம் அவர்களின் நல்லாசிரோடு, மறைமாவட்ட முதன்மைதந்தை பேரருட்திரு M.பிலோமின்தாஸ் அவர்கள் வெளியிட, மறைமாவட்ட பொருளார் தந்தை பேரருட்திரு J. அந்தோணி ஜோசப் அவர்கள் அதன் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்.

இவண்,

அருள்பணி A. இராஜமாணிக்கம்,

இயக்குநர், மறைப்பணி மையம்.

விவிலியம் மற்றும் அன்பிய பணிக்குழுக்கள்

செப்டம்பர் மாதம் மூன்றாம் தேதி விவிலிய மாதத்தை முன்னிட்டு அதை சிறப்பான விதத்தில் கொண்டாட விவிலிய மாத இதழ் அனைத்து பங்குகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

விவிலிய மாதத்தை சிறப்பு செய்கிற வேளையில் மறைமாவட்டத்தின் பெயரால் விவிலிய நாட்குறிப்பேடு தயார் செய்வதற்கான கள ஆய்வுப் பணிகள் நடைபெற்றன.

திருவிலிய மாதத்தை முன்னிட்டு திருவிவிலியம் முப்பணி நடுநிலையத்தில் இருந்து பெறப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்காக தயார் நிலையில் உள்ளது.

செப்டம்பர் மாதம் 28ஆம் தேதி கும்பகோணம் பங்கில் நடைபெற்ற விவிலிய கலை விழா பணிக்குழு செயலர் துணையோடு சிறப்புற நடைபெற்றது.

இவண்,

அருள்பணி. I. ஜான் கென்னடி,

செயலர், விவிலியம் மற்றும் அன்பிய பணிக்குழுக்கள்.

பொதுநிலையினர் பணிக்குழு

30-08-2025 புள்ளம்பாடி மறைவட்டம், புள்ளம்பாடி பங்கைச் சார்ந்த மூத்த நற்செய்தி பணியாளர் திரு. S. சாமிநாதன் அவர்களின் இறப்பிற்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அன்னாரின் அடக்கத் திருப்பலியில் பொதுநிலையினர் பணிக்குழு செயலரோடு, அம்மறைவட்டத்தைச் சார்ந்த பொதுநிலையினர்கள் கலந்துகொண்டு அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபித்தனர்.

03-09-2025 கிறித்தவ வாழ்வுரிமை இயக்கத்தை கும்பகோணம் பங்கின் கிளைப்பங்குகளில் செயல்படுத்துவது குறித்து உதவிப் பங்குத் தந்தையுடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

09-09-2025 கும்பகோணம் மறைவட்டத்தைச் சார்ந்த அருள்பணியாளர்களின் மாதாந்திரக் கூடுகையில் பணிக்குழுவின் செயல்பாடுகள் குறித்தும் கிறித்தவ வாழ்வுரிமை இயக்கம் குறித்தும் அறிமுகவுரை நிகழ்த்தப்பட்டது.

12-09-2025 சிவகங்கை மறைமாவட்டத்தின் அழைப்பின் பேரில் தேவக்கோட்டையில் மூன்று நாட்கள் (செப்டம்பர் 26,27,28) நடைபெறவுள்ள வானவில்-ஏற்றம் தரும் எதிர்நோக்குக் கூடுகை கருத்தரங்கில் நமது மறைமாவட்டம் சார்பாக பொதுநிலையனர் கலந்து கொள்வது குறித்து முதன்மைகுரு மற்றும் மேய்ப்புப்பணி மைய இயக்குனர் அருட்தந்தையரிடம் கலந்தாலோசிக்கப்பட்டது. மறைமாவட்டம் சார்பாக

பணிக்குழுக்கள் மற்றும் மேய்ப்புப்பணிப் பேரவைப் பிரதிநிதிகள் 30 பேர் கலந்து கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

19,20,21-09-செப்டம்பர் 2025: தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு உருவாக்க மையம், பிராட்டியூர், திருச்சியில் நடைபெற்ற இரண்டாம் கட்ட கருத்தாளர் பயிற்சியில் பணிக்குழு செயலருடன் திரு. அமல்ராஜ் (ஜெயங்கொண்டம்) மற்றும் திருமதி. லதா அமல்ராஜ் (கும்பகோணம்) என மூவர் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள்.

செப்டம்பர், அக்டோபர் 2025 செயல் திட்டங்கள்:

1. செப்டம்பர் 26, 27, 28 தேவகோட்டை வானவில் - ஏற்றம் தரும் எதிர்நோக்குக் கூடுகை கருத்தரங்கில் மறைமாவட்ட பொதுநிலையினர் கலந்து கொள்வது.
2. அக்டோபர் 5 (காலை), No.1 டோல்கேட், குழந்தையேசு ஆலயத்தில் பங்குப் பேரவை அமைப்பது.
3. அக்டோபர் 5 (மாலை), ஜெயங்கொண்டம் மறைவட்ட மேய்ப்புப் பணிப்பேரவைக் கூட்டம் நடத்துவது.
4. அக்டோபர் 7, மைக்கேல்பட்டி மறைவட்ட அருட்பணியாளர்களின் மாதாந்திரக் கூடுகையில் பணிக்குழு மற்றும் கிறித்தவ வாழ்வுரிமை இயக்கம் குறித்த அறிமுகவுரை நிகழ்த்துவது.
5. அக்டோபர் 10, 11, 12 புள்ளம்பாடி பங்கில் சிவகங்கை நற்செய்தி பணியாளர்களைக் கொண்டு இல்லங்கள் சந்திப்பு நிகழ்த்துவது.

6. அக்டோபர் 24, 25, 26 கருத்தாளர் பயிற்சியின் மூன்றாம் கட்ட பயிற்சியில் கலந்துகொள்வது.

இவண்,
திரு. செ. பாப்பு வில்லியம்,
செயலர், பொதுநிலையினர் பணிக்குழு.

பெண்கள் பணிக்குழு

3, 13-9-2025 ஆகிய தினங்களில் கும்பகோணம் புனித வளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் புனித அன்னாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அகிய பள்ளிகளில் மறைக்கல்வி பணி குழுவோடு இணைந்து மறைக்கல்வி நன்னெறி ஆண்டாய்வு மேற்கொள்ளப்பட்டது

04-9-2025 வடகரை அரசு பள்ளியில் பெண் குழந்தைகள் தினம் கொண்டாடுவது குறித்து தலைமை ஆசிரியர் அவர்களை சந்தித்து பேசப்பட்டது.

09-09-2025 பெரம்பலூர் மறைவட்டத்தில் உள்ள அருள்தந்தையர்களுக்கான மாதாந்திர தியானம் துறையூர் பங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பணிக்குழு செயலர் அவர்கள் பங்கேற்று தங்கள் பங்கில் மகளிர் குழுக்கள் தொடங்குவதற்கான ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் கேட்டு வரப்பட்டது.

16-09-2025 கீழமிக்கேல்பட்டி பங்கில் பெண்களை ஒருங்கிணைத்து, கூட்டங்கள் நடத்தி, புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுத்து, புதியதாக பெண்கள் இயக்கம் தொடங்கப்பட்டது.

17-09-2025 வரதராஜன்பேட்டை பங்கு மணக்கொல்லை பகுதியில் உள்ள பெண்களை சந்தித்து பெண்கள் இயக்கம் தொடங்க அதற்கான தயாரிப்பு பணிகள் செய்துவரப்பட்டது.

20,22-09-2025 எஸ்.புதூர், மாத்தூர், வில்லியவரம்பில் ஆகிய பங்குகளில் உள்ள பெண்கள் இயக்க பொறுப்பாளர்களை சந்தித்து வரப்பட்டது

22-09-2025 திருக்காவலூர் பங்கில் பெண்களை ஒருங்கிணைத்து கூட்டங்கள் வைத்து, பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுத்து பெண்கள் இயக்கம் தொடங்கப்பட்டது. அன்று மாலை கபிரியேல்புரம் பங்கில் பெண்களை சந்தித்து வரப்பட்டது.

23-09-2025 புறத்தாக்குடி, புதூர் உத்தமனூர் பங்குகளில் பெண்களை சந்தித்து பெண்கள் இயக்கம் தொடங்குவதற்காக ஏற்பாடுகள் செய்துவரப்பட்டன.

சுக்காம்பார், குவனெல்லாநகர், காணியிருப்பு, சிக்கல் நாயக்கன்பேட்டை, விளாகம் ஆகிய பங்குகளிலும், மற்றும் பல பங்குகளிலும் பெண் குழந்தைகள் தினமானது திருப்பலி வழியாக சிறப்பிக்கப்பட்டது. மேலும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள், இனிப்புகள் வழங்கப்பட்டன.

08-09-2025 அரியலூர் பங்கில் பெண் குழந்தைகள் தினம் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பணிக்குழு செயலர் அருள்சகோதரி ஸ்கொலாஸ்டிகா மற்றும் திருமதி. சம்மனசு மேரி அவர்கள் சிறப்பு

அழைப்பாளர்களாக இந்நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்து வந்தார்கள்.

இவண்,
அருள்சகோதரி. ஸ்கொலாஸ்டிகா, DSMP
செயலர், பெண்கள் பணிக்குழு.

அருங்கொடை பணிக்குழு

1) 02.09.2025 கூவத்தூர் தூய அந்தோணியார் ஆலயத்தில் சிறப்பு ஜெப வழிபாடு நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு இறையாசிர் பெற்றனர்.

2) 03.09.2025 தமிழக அளவில் நற்செய்தி பணியாளர்களுக்கான சிறப்பு அமர்வு பாண்டிச்சேரி உயர்மறை மாவட்ட பேராயர் தலைமையில் நடைபெற்றது. இதில் பணிக்குழுவின் செயலர் பங்கேற்றார்.

3) 06.09.2025 சலேத் அன்னையின் திருத்தலத்தில் ஒரு நாள் நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறையாசிர் பெற்றனர்.

4) 07.09.2025 நாச்சியார் கோவில் பங்கு கோவனூரில் மாலை 3 மணி நேரம் நற்செய்தி கூட்டம் மற்றும் திருப்பலி நடைபெற்றது. இந்நிகழ்வில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறையாசிர் பெற்றனர்.

5) 09.09.2025 அருங்கொடை அலுவலகத்தில் 35க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனித்தனியாக ஜெபித்து இறையாசிர் பெற்று சென்றனர்.

6) 13.09.2025 ஏலாக்குறிச்சி தூய அடைக்கல அன்னையின் திருத்தலத்தில் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை சிறப்பு நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. இதில் 700க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறையாசிர் பெற்றனர்.

7) 14.9.25 கும்பகோணம் தூய அருளானந்தர் மறைப்பணி நிலையத்தில் சிறப்பு நற்செய்தி கூட்டம் ஒரு நாள் நடைபெற்றது இதில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறையாசிர் பெற்றனர்.

8) 23.9.25 அருங்கொடை அலுவலகத்தில் 50க்கும் மேற்பட்ட குடும்பத்தார் தனிப்பட்ட விதத்தில் சந்தித்து இறையாசிர் பெற்று சென்றனர்.

இவண்,
திரு. A. யூஜின் டோனி,
செயலர், அருங்கொடை பணிக்குழு.

பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு

16.08.2025 ஜெயங்கொண்டம் மறைவட்டம் வரதராசன்பேட்டை பங்கில் தலித் கிறிஸ்தவ மக்கள் மன்ற பொறுப்பாளர் களை ஒருங்கிணைத்து தொழில் முனைவோர் பயிற்சி கூட்டம் அருள்பணி இருதயராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் 45 தலித் கிறிஸ்தவ மக்கள் மன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

17.08.7025 மைக்கேல்பட்டி மறைவட்டத்தில் நடைபெறுகின்ற மாலை நேர வகுப்பு மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை பணிக்குழுவின் செயலர் நேரில் சந்தித்தார்.

18.08.2025 தேர்தலில் வெற்றி பெற்ற தலித் கிறித்தவ உள்ளாட்சி பிரதிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம் செயலர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நடுமண்டல ஒருங்கிணைப்பாளர் திரு. தமிழரசன் அவர்கள் அரசியல் விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கினார். இதில் 15 நபர்கள் கலந்துகொண்டார்கள்.

19.08.2025 கும்பகோணம் மறைவட்டத்தில் நடைபெறுகின்ற மாலை நேர வகுப்பு மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை பணிக்குழுவின் செயலர் நேரில் சந்தித்து கல்வியின் முக்கியத்துவத்தை குறித்து எடுத்துகூறினார்.

19.08.2025 கும்பகோணம் மறைவட்டத்தில் உள்ள தலித் கிறித்தவ மக்கள் மன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைத்து பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது எவ்வாறு என்பதை பற்றி விழிப்புணர்வு பயிற்சிக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் 40 பேர் கலந்துகொண்டு பயனடைந்தார்கள்.

23.08.2025 மறைமாவட்ட அளவில் தலித் கிறித்தவ உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுக்குழு பயிற்சி கூட்டம் பணிக்குழுவின் செயலர் தலைமையில் நடைபெற்றது. இதில் 40 நபர்கள் கலந்துகொண்டார்கள். மேலும் அன்றைய தினம் மதியம் 2 மணியளவில் மறைமாவட்ட கண்காணிப்புக் குழு பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது.

25.08.2025 தலித் அல்லாத உறுப்பினர்களை ஒருங்கிணைத்து தலைமைத்துவ பயிற்சிக் கூட்டம் பணிக்குழுவின் செயலர் தலைமையில் மறைபணி மையத்தில் நடைபெற்றது.

28.08.2025 ஜெயங்கொண்டம் மறைவட்டத்தில் நடைபெறுகின்ற மாலை நேர வகுப்பு மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை பணிக்குழுவின் செயலர் நேரில் சந்தித்தார்.

01.09.2025 – 11.09.2025 வரை மறைக்கல்வி – நன்னெறி பாடங்களுக்கான ஆண்டாய்விற்கு உதவி செய்யப்பட்டது.

இவண்,

அருள்பணி. A. இருதயராஜ்,

செயலர், பட்டியலினத்தார்/பழங்குடியினர் பணிக்குழு.



குடந்தை மறைவட்ட இளைஞர் ஞாயிறு கொண்டாட்டம், கும்பகோணம்



இளைஞர்களுக்கான செயற்கை நுண்ணறிவு பயிற்சி பாசறை, பூண்டி

வருந்துகிறோம்

நம் குடந்தை மறைமாவட்டம், புள்ளம்பாடி பங்கைச் சேர்ந்த புதுவாழ்வு செபக்குழு நிறுவனர் திரு S. சாமிநாதன் அவர்கள் கடந்த 29.08.2025 அன்று இறைவனடி சேர்ந்தார். பொதுநிலையினருக்கான திருப்பணியாளர் மற்றும் இறையியல் கல்வி பயின்ற இவர், 1997 ஆம் ஆண்டு புதுவாழ்வு செபக்குழுவை தொடங்கினார். இந்த செபக்குழுவானது மறைமாவட்ட யூபிலி ஆண்டான 1999 ஆம் ஆண்டில் மறைமாவட்ட அங்கீகாரம் பெற்றது. அதைத் தொடர்ந்து ஏறக்குறைய 28 ஆண்டுகளாக இலால்குடி, புள்ளம்பாடி மறைவட்டங்களிலும் மேலும் பல்வேறு பகுதிகளிலும் தனது செபக்குழுவின் வழியாக பல்வேறு அரும்பணிகளை புரிந்து இறைவனுக்கு பெருந்தொண்டாற்றினார். அவரது பணிகளை நன்றியோடு எண்ணிப்பார்க்கிற வேளையில், அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார், உறவினர்கள், நண்பர்கள் ஒவ்வொருவருக்கும் ஆயர் மற்றும் அனைத்து அருள்தந்தையர்கள் சார்பாக ஆழ்ந்த வருத்தங்களையும் செபங்களையும் உரித்தாக்குகின்றோம். அன்னாரது ஆன்மா இறைவனில் இளைப்பாற தொடர்ந்து செபிக்கின்றோம்.



ஆயர் மற்றும் அருள்தந்தையர்கள், கும்பகோணம்.

KUMBAKONAM DIOCESE NEWS LETTER

வாழ்த்துகிறோம்



கடந்த 05.09.2025 அன்று சென்னையில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக நடைபெற்ற நல்லாசிரியர் விருது வழங்கும் விழாவில், தமிழக அரசின் உயரிய விருதான டாக்டர். ராதாகிருஷ்ணன் விருதினை, மாண்புமிகு துணை முதல்வர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்களின் கரங்களில் இருந்து பெற்று நமது மறைமாவட்டத்திற்கு பெருமை சேர்த்த அருள்முனைவர் V.E. **சாந்தகுமார்** அவர்களை நம் மறைமாவட்ட ஆயர் மற்றும் அனைத்து அருள்பணியாளர்கள் சார்பாக நெஞ்சார வாழ்த்துகின்றோம். அறிவுக்கண் திறக்கும் அறப்பணியாம் அவரது ஆசிரியப்பணி தொடர்ந்து சிறக்க அவருக்காக செபிக்கின்றோம்.

Bishop's House, Post Box No. 3, Kumbakonam - 612 001.
E-mail: kumbakonamdiocese@gmail.com
Webpage : www.dioceseofkumbakonam.org.